**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

OS.109 of 2024

Civil Case No :: Dw -3

Name :: சண்முகவேலு

Father's/Husband's Name :: தங்கவேல்

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 10.09.2025.

**முதல் விசாரணை**

நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் திசையன்விளை மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள விவரப்படி ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். சர்வே எண்.421/3 ன் நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா சா.சா.ஆ-1 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் அ பதிவேடு சா.சா.ஆ.2 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் அடங்கல் சா.சா.ஆ.3 ஆகும். மேற்படி சர்வேஎண்ணின் புலவரைபடம் சா.சா.ஆ-4 ஆகும். சர்வே எண்.413/1 ன் அ பதிவேடு சா.சா.ஆ.5 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் சிட்டா சா.சா.ஆ-6 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் புலவரைபடம் சா.சா.ஆ-7 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் அடங்கல் சா.சா.ஆ.8 ஆகும். சர்வே எண்.1386/1B, 1386/2, 1386/3A1 , 1390/4, 1391 - ன் அடங்கல் சா.சா.ஆ.9 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் அ பதிவேடு சா.சா.ஆ.10 ஆகும். மேற்படி

சர்வே எண்ணின் சிட்டா சா.சா.ஆ-11 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் புலவரைபடம் சா.சா.ஆ-12 ஆகும். சர்வே எண்.421/3 ன் பட்டா எண்.877 ஆகும். மேற்படி பட்டாவில் 31.50 ஏர்ஸ் நிலமும், 13 நபர்கள் பெயரும் உள்ளது. மேற்படி பட்டாவின் அடிப்படையில் யார் யாருக்கு எவ்வளவு நிலம் என்பது இப்பட்டாவில் துலங்காது என்றால் சரிதான். புலஎண்.421/3 ல் வீடு ஏதாவது கட்டப்பட்டிருந்தால் அதற்கான குறியீடு இருக்கிறதா என்றால் நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் குறிப்பு காலம் 13 ல் ஓட்டுவீடு, காரை வீடு , காலி மனை என்று உள்ளது.

குறுக்கு விசாரணை

நத்தம் நிலவரித்திட்டம் 1989 ல் ஆரம்பித்து 1992 ல் முடிகிறது என்றால் சரிதான். அரசு குறிப்பிட்ட காலத்திற்குள் பட்டா மற்றும் புலவரைபடம் தயார் செய்து தனிநபருக்கு ஒப்பந்தம் செய்து கொடுத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்படிதான் பட்டாவும் புலவரைபடமும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த பணிகாலத்தில் இருந்த தாசில்தாரை விசாரணை செய்தால் விவரம் தெரியும் என்றால் சரிதான். 1989 ல் ஆரம்பித்து 1992 வரையிலான நத்தம் நிலவரித்திட்டத்தில் வழங்கிய கோப்புகள் செட்டில்மெண்ட் தாலுகா அலுவலகத்தில் இருக்கும் என்றால் தாலுகா அலுவலகத்தில் இருக்க வாய்ப்பில்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருக்குமா என்றால் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 1989 ல் ஆரம்பித்து 1992 வரையிலான நத்தம் நிலவரித்திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாக்கள் முறையாக வழங்கவில்லை என்றால் சரியல்ல. நத்தம் நிலவரித்திட்டத்தில் வீடு இருந்தால்தான் பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். 421/3 ல் புலவரைபடத்தில் வீடு இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் நான்கு வீடுகள் இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நான்கு வீடுகளும் யார் யாருக்கு என்று தனித்தனியாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். மொத்தமாக உள்ளது. பட்டாவில் உள்ள 13 நபர்களுக்கும் இடையே பேசி தனித்தனியாக அனுபவம் செய்து வரலாம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பதியப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் அனுபவம் செய்யலாம் என்றால் சரிதான். சர்வே எண்.421/3 ல் மேற்படி 13 நபர்களும் தனித்தனியாக அனுபவம் செய்து

வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சரியான முறையில் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 13 நபர்களுக்கும் ஒரு நபருக்கு தலா 6 செண்டு வீதம் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீடு இருக்கும் இடத்திற்கு தனித்தனியாக ஏன் நத்தம் பட்டா வழங்கப்படவில்லை என்பதற்கான காரணம் என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். வீடு இருப்பது பட்டாவிலும், சிட்டாவிலும் துலங்காது என்றால் சரியல்ல. துலங்கும். தூய அடங்கலில் உள்ளது. ஓட்டுவீடு, காரை வீடு, காலிமனை என்று உள்ளது. யார் யார் பெயரில் வீடு மற்றும் காலிமனை என்று தனித்தனியாக துலங்காது என்றால் சரிதான். பட்டா முறையான விசாரணைப்படி வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.